காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2053 கார்த்திகை 22 வியாழக்கிழமை 08.12.2022 கதிர் 33

### இனி இது ரகசியம் அல்ல!

'பிள்ளையார் கல்யாணம்' என நான் அடிக்கடி விமர்சித்து வந்த பலாலி – சென்னை விமான சேவை கடைசியாக ஆரம்பமாகப் போகின்றது. வரும் திங்களன்று முதலாவது விமானம் வந்து இறங்குகிறது.

பயண பதிவும் ☞ 2

## அமைச்சர் ஜெய்சங்கர் ராஜ்ய சபையில் விளக்கம்

# முழுமையான இலங்கைக்கே இந்தியாவின் ஆதரவு, உதவி!

### அது தனித்து தமிழ்நல அணுகுமுறையல்ல எனவும் தெரிவிப்பு



நேற்று ராஜ்யசபையில் வைகோ



அமைச்சர் ஜெய்சங்கர்

புதுடில்லி,டிசெம்பர் 08

"பொருளாதார நெருக்கடியில் சிக்கிய நமது அயல்தேசமான இலங்கைக்கான இந்திய உதவி தனித்து தமிழ் நல அணுகுமுறையில் முன்னெடுக்கப்படவில்லை. அது முழுமையான இலங்கைக்கான உதவி."

— இவ்வாறு நேற்றுப் புதுடில்லியில் இந்திய ராஜய சபையில் உரையாற்றிய அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கர் தெரிவித்தார். மறுமலர்ச்சி தி.மு.கவின் தலைவர் வைகோ எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். ☞ 2

## 'பட்ஜட்'டின் மீது இன்று இறுதி வாக்கெடுப்பு!

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசின் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு இன்று வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் என்ற வகையில் 2023ஆம் ஆண்டிற்கான வரவு – செலவுத் திட்டத்தை கடந்த நவம்பர் மாதம் 14 ஆம் திகதி திங்கட்கிழமை ☞ 2

## அமைச்சரவை மாற்றம் இன்னும் சில நாள்களில்


இன்னும் சில தினங்களில் அமைச்சரவையில் மாற்றங்கள் இடம்பெறும் என அரசியல் வட்டாரங்கள் தகவல் தெரிவிக்கின்றன.

இதன்படி, சுகாதாரம், போக்குவரத்து, மின்சாரம் மற்றும் எரிசக்தி ஆகிய அமைச்சுப் பதவிகளில் மாற்றம் மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ராஜித சேனாரத்ன, குமார வெல்கம மற்றும் துமிந்த திஸாநாயக்க ஆகியோருக்கு அமைச்சுப் பதவிகள் பகிர்ந்தளிக்கப்படவுள்ளதாகவும் அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தற்போது அமைச்சுப் பதவிகளை வகிக்கும் ☞ 2

## புணானையில் யானை தாக்கி ஒருவர் சாவு



யானை தாக்கி நபரொருவர் மரணமடைந்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர். புணானை பகுதியில் வைத்து இந்த சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது. இவ்வாறு மரணமடைந்தவர் 60 வயது மதிக்கத்தக்கவர் என்றும், மரணமடைந்த நபர் யாரென்று இதுவரை அடையாளம் காணப்படவில்லை என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். ☞ 2

## ஏழு அடி உயர சிவலிங்கம் செம்மணியில் பிரதிஷ்டை!



சிவபூமி அறக்கட்டளையின் ஏற்பாட்டில் செம்மணியில் உள்ள யாழ்ப்பாண நுழைவாயிலில் ஏழு அடி உயரமான சிவலிங்க சிலை நேற்றுக் காலை 8 மணியளவில் பிரதிஷ்டை செய்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் உட்பட மதப் பெரியவர்கள், ஆர்வலர்கள் பொதுமக்கள் எனப்பலரும் ☞ 2

## உணவுப் பாதுகாப்பின்மை நிலைமை மோசமடையும்!

### கவலை தெரிவிக்கிறது யுனிசெவ்




அதிகரிக்கும் உணவுப் பாதுகாப்பின்மை, வறுமை, உள்நாட்டு – வெளிநாட்டு தொழில் புலம்பெயர்வு போன்றவற்றால் இலங்கையில் அனேக பெற்றோர் தங்கள் பிள்ளைகளை சிறுவர் பராமரிப்பு இல்லங்களில் ☞ 2

## யாழில் காணி மோசடி மேலும் ஐவர் கைது!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், டிச.08

யாழில் சட்டவிரோதமான முறையில், ஆறு பரப்புக் காணிக்கு பொய்யான உறுதி முடித்த குற்றச்சாட்டின் கீழ் சட்டத்தரணி ஒருவர் உட்பட ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர். ☞ 2

## சர்வதேச நாணய நிதியத்தின் மாநாட்டில் இம்முறை இலங்கை விவகாரம் இல்லை!



சர்வதேச நாணய நிதியத்தின் கடன் உதவி தொடர்பான உச்சிமாநாடு தற்போது வொஷிங்டன், டி.ஸியில் நடைபெற்று வருகிறது.

அதன் நிகழ்ச்சி நிரல் நிதியத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் உள்ளது. ஏற்கனவே பணியாளர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ள இலங்கை, நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

எவ்வாறாயினும், இலங்கைக்குப் பிறகு ஊழியர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட எகிப்து விடயம் இம்முறை உச்சிமாநாட்டு நிகழ்ச்சி நிரலில் உள்ளது என்பது தெளிவாகிறது.

நிதியத்திடம் நிதி உதவி கோரிய பின்வரும் நாடுகள் குறித்து இந்த மாநாட்டில் விவாதிக்கப்படுகிறது:– பார்படோஸ், நமீபியா, ருவாண்டா, ஆர்மீனியா, ஈக்வடார், காம்பியா, பெனின் மாநிலம், செனகல் மற்றும் எகிப்து.

நாண நிதியத்தின் அடுத்த கூட்டம் மார்ச் மாதம் நடைபெறும்.

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஆரம்பமாகிவிட்டது.

இந்தப் பயண கட்டணம் தொடர்பில் ஒரு சின்னக் கணக்கு. இந்திய ரூபாயில் கட்டணக் கணக்கு காட்டப்பட்டது. அதை விளங்கிக் கொள்வதற்காக இலங்கை ரூபாய்க்கு மாற்றி உள்ளேன் - ஓர் இந்திய ரூபா அண்ணளவாக ஐந்து இலங்கை ரூபாவுக்குச் சமன் என்ற கணக்கில்.

இனி விடயத்துக்கு வருவோம்.

யாழ்ப்பாணம்(பலாலி) - சென்னை - யாழ்ப்பாணம் என்று சென்று திரும்பும் பயணச்சீட்டுக்கு 80 ஆயிரம் ரூபா.

அதுவே யாழ்ப்பாணத்தில் இருந்து சென்னை செல்வதற்கான ஒரு வழி பயணம் என்றால் சுமார் 45,000 ரூபா.

ஆனால் சென்னையில் இருந்து யாழ்ப்பாணம் என்றால் ஆக 33 ஆயிரத்து 500 ரூபா மட்டுமே.

ஏன் இப்படி ஒரு வழி பயணத்துக்கு ஒரு பக்கத்தில் கூடவும் மற்றப் பக்கத்தில் குறையவும் - ஏறத்தாழ 12 ஆயிரம் ரூபா வேறுபாடு வருகின்றது எனத் தேடிப் பார்த்தேன்.

எல்லாம் பலாலி விமான நிலையத்தில் ஒரு பயணிக்கான கட்டணமாக 60 டொலர் வரி அறவிடுவதுதான் காரணம். இதே தொகைதான் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்திலும் பயணி ஒவ்வொருவருக்கும் வரியாக இலங்கை அரசு அறவிடுகிறது.

அதேசமயம், இந்தப் பயணிகள் வரி 60 டொலரை, தெற்கில் அம்பாந்தோட்டையை ஒட்டித் தாம் கட்டித் திறந்து, பயணிகளே வராமல் ஈ ஓட்டுகின்ற மத்தள விமான நிலையத்துக்கு இலங்கை அரசு அறவிடாமல் முழு வரி விலக்கு அளித்திருக்கின்றது.

பலாலி விமான நிலையத்துக்கு இந்த வரியை அறுபது டொலரில் இருந்து முப்பது டொலராக - அரைவாசியாக - குறைப்பதற்கு கொழும்பு அரசு பச்சைக் கொடி காட்டி இருந்தாலும், அது இன்னமும் நடைமுறைக்கு வரவில்லை. வந்தால் இருவழிக் கட்டணத்திலும், பலாலியில் இருந்து சென்னை செல்வதற்கான ஒரு வழி கட்டணத்திலும் சுமார் 12 ஆயிரம் ரூபா குறைய வாய்ப்புண்டு. குறைந்தால் நல்லது. குறையுமா...?

இதே சமயம், காங்கேசன்துறை - காரைக்கால் கடல் மார்க்கப் பாதை சேவையைவிரைந்துஆரம்பிப்பதற்கான பச்சைக் கொடியும் காட்டப்பட்டு இருப்பதான செய்திகள் வருகின்றன. விரைந்து நடந்தால் நல்லது. ஐயப்ப யாத்திரை பக்தர்களுக்கு விமோசனம் கிடைக்கும்.

***

நேற்று ஆங்கில சமூக ஊடகம் ஒன்றில் ஒரு கட்டுரை பார்த்தேன். அதன் சாரம் இதுதான்:-

தமிழ் மக்களுக்காகப் போராடிய விடுதலைப்புலிகளின்தலைவர்பிரபாகரனை நந்திக் கடலை ஒட்டி கொல்லப் பணித்த கோட்டாபய, பின்னர் அவரது சீருடைகளைக் களைந்து, உள்ளாடையுடன் அவரது உடலைக் காட்சிக்கு வைத்தார். அதனைத் தம் பெரும் சாதனையாக அவர் எண்ணிக் கொண்டார்.

கடைசியில் என்ன நடந்தது?

கோட்டாபய ஜனாதிபதி மாளிகையில் இருந்து உள்ளாடை கூட எடுக்காமல் அதனை கைவிட்டு ஓடித்தப்ப வேண்டியவரானார். (ஜனாதிபதி மாளிகைக்குள் ஜூலை 9 இல் புகுந்த போராட்டக்காரர்கள், அங்கு அவரது அறையில் தொங்கிக் கொண்டிருந்த ஜட்டியை காட்சிக்கு வைத்த படங்கள் சமூக ஊடகங்களில் வைரலாகப் பரவியமை நினைவிருக்கலாம்)

தமிழ் மக்கள் இன்னும் - இன்றும் - பிரபாகரனைத் தங்கள் தேசியத் தலைவராகத்தான் மதித்துப் பூஜிக்கின்றார்கள். ஆனால்சிங்களமக்களோதங்களுக்காகப் பிரபாகரனை அழித்த கோட்டாபயவை இன்று நாட்டை அழித்த துரோகியாகவே திட்டுகின்றார்கள்.

- இதுதான் அந்த கட்டுரையின் சாரம். ஏதோ இதை வாசகர்களுக்குப் பகிர வேண்டும் என்று தோன்றியதால் பகிர்ந்தேன். அவ்வளவுதான்...!

- மின்னல் -

## முழுமையான ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

வைகோஜியின் இரண்டு வினாக்கள் தொடர்பாக பதிலளிக்க விரும்புகிறேன்.

ஒன்று -ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சிலில் (இலங்கை தொடர்பான பிரேரணையில்) நாம் வாக்களிக்காமல் விட்டமை பற்றியது. இது இந்தியாவின் நீண்ட கால நிலைப்பாடு. எங்களது அரசு மாத்திரமல்ல, இதற்கு முந்திய அரசுகளும் கூட இத்தகைய அணுகுமுறையையே கடைப்பிடித்தன. இலங்கையில் தமிழ் சமூகத்தின் நெருக்கடிகளை உரிய முறையில் அணுகித் தீர்ப்பதற்கும் அவர்களை மேம்பாடடையச் செய்வதற்கும் இதுவே ஆக்கபூர்வமான வழிமுறை என்று அவை (இந்திய அரசுகள்) கருதிச் செயற்பட்டன. அதையே தொடர்ந்தும் எங்கள் அணுகுமுறையாக முன்னெடுக்கின்றோம்.

அடுத்தது - இலங்கைக்கான எங்களின் உதவி பற்றியது. அது முழுமையான இலங்கைக்கான உதவி. அதனை உறுப்பினர் வைகோ வரவேற்க வேண்டும். உதவி வழங்கும் விடயத்தில் நாம் தனித்து தமிழ் நல அணுகுமுறையை முன்னெடுக்கவில்லை. முழுமையாக தமிழ் சமூகம், சிங்கள சமூகம், ஏனைய சமூகங்களும் அடங்கிய - அனைத்தையும் கொண்ட முழு இலங்கைக்குமே நாம் அந்த உதவிகளை வழங்கினோம்

எங்கள் அயல் தேசம் இத்தகைய பொருளாதார நெருக்கடியில் இருக்கும் போது நாங்கள் விரைந்து உதவி செய்யாவிட்டால் அது பெரும் தவறாகிவிடும். ஆகவே நாங்கள் அந்த உதவிகளை செய்தோம்.

கடுமையான பொருளாதார சூழ்நிலையில் சிக்கியுள்ள அண்டை நாட்டிற்கு ஆதரவு வழங்குவதில் நாம் வகுப்புவாத அணுகுமுறையை எடுக்கவில்லை. - என்றார்.

## 'பட்ஜட்'டின் மீது இன்று ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நாடாளுமன்றத்துக்கு முன்வைத்தார்.

அதன் பிரகாரம் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதம் கடந்த மாதம் 15 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை முதல் 22 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை வரையிலான 7 நாள்கள் இடம்பெற்றன.

செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு இரண்டாம் மதிப்பீடு மீதான வாக்கெடுப்பு இடம்பெற்றது. இந்த வாக்கெடுப்பில் வரவு - செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக 121 பேரும் எதிராக 84 பேரும் வாக்களித்தனர்.

இதில் அரசுடன் இணைந்து எதிரணியில் உள்ள இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் எம்.பி.க்களான ஜீவன் தொண்டமான், ராமேஸ்வரன் ஆகியோரும் எதிரணியில் உள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை சேர்ந்த துமிந்த திசாநாயக்க, பிரியங்கர ஜயரத்ன, ஜோன் செவிரத்ன ஆகியோரும் வாக்களித்தனர்.

வரவு - செலவுத் திட்டத்திற்கு எதிராக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் எதிர்க்கட்சிகளான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, தேசிய மக்கள் சக்தி (ஜே.வி.பி.), கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணி, டலஸ் அழகப்பெரும, விமல் வீரவன்ச தலைமையிலான அணியினர் வாக்களித்தனர்.

அதேபோன்று எதிரணியில் உள்ள ஏ.எல்.எம்.அதாவுல்லா, அலி சப்ரி ரஹீம் ஆகியோரும் ஆதரவாக வாக்களித்தனர்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு வாக்களிப்பில் கலந்துகொண்டிருக்கவில்லை. என்றாலும் தமிழ் தேசிய மக்கள் கூட்டணி தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் சபையில் இருந்த போதும் வாக்களிப்பதைத் தவிர்த்துக் கொண்டார்.

## அமைச்சரவை மாற்றம்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கெஹலிய ரம்புக்வெல்ல, பந்துல குணவர்தன மற்றும் கஞ்சன விஜேசேகர ஆகியோருக்கு மாற்று அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், இன்னும் சில இராஜாங்க அமைச்சர்களும் விரைவில் பதவியேற்க உள்ளனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

அமைச்சு மற்றும் இராஜாங்க அமைச்சுப் பதவிகளை வழங்குவது தொடர்பான கலந்துரையாடல்கள் தற்போது இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளன என அரசியல் வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தும் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்வரும் தினத்தில் அரசாங்கத்துடன் இணைந்து தமது ஆதரவை வெளிப்படுத்தவுள்ளனர் என அரசியல் வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

இதன்படி, ஐக்கிய மக்கள் சக்திக்கு ஆதரவளிக்கும் சிறு கட்சிகளின் பல தலைவர்களுக்கும் எதிர்காலத்தில் அரசாங்கத்தில் அமைச்சுப்பதவிகள்வழங்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

## உணவுப் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விடுகின்றனர் என யுனிசெவ் அமைப்பு தெரிவித்துள்ளது.

2022 இல் சிறுவர் பாதுகாப்பு விவகாரங்கள் அதிகரித்துள்ளன. குறிப்பாக கிராம மற்றும் மலையகப்பகுதிகளில் அவை அதிகரித்துள்ளன என யுனிசெவ் தெரிவித்துள்ளது. சிறுவர்கள் பாதுகாப்பு சவால்களை எதிர்கொள்கின்றனர்.

இலங்கை 2023 ம் ஆண்டும் தொடரும் என எதிர்பார்க்கப்படும் மோசமான பொருளாதார நெருக்கடியின் பிடியில் உள்ளது. 2.9 மில்லியன் சிறுவர்கள் உட்பட 6.2 மில்லியன் இலங்கையர்களிற்கு 2023 இல் மனிதாபிமான உதவி அவசரமாக தேவைப்படுகின்றது எனவும் யுனிசெவ் தெரிவித்துள்ளது.

அதிகரிக்கும் பணவீக்கம், அதிகரிக்கும் வருமான பாதுகாப்பின்மை, அத்தியாவசிய பொருள்களின் தட்டுப்பாடு காரணமாக குடும்பங்கள் அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்ய முடியாத நிலையில் உள்ளன எனவும் யுனிசெவ் தெரிவித்துள்ளது.

2002 முழுவதும் தொடர்ச்சியான அடிக்கடி ஏற்பட்ட இயற்கை அழிவுகள், விவசாய துறைக்கு பாதிப்பை ஏற்படுத்தி விளைச்சலை அழித்தன எனவும் யுனிசெவ் தெரிவித்துள்ளது. கடந்த வருடங்களை உணவு உற்பத்தியில் 40 வீத வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுவதால் 2022 ஒக்டோபர் முதல்2023 பெப்ரவரி வரை உணவுபாதுகாப்பின்மை மேலும் மோசமடையும் எனவும் யுனிசெவ் தெரிவித்துள்ளது.

5.3 மில்லியன் மக்கள் ஏற்கனவே உணவுகளை தவிர்க்கின்றனர். இது எதிர்வரும் மாதங்களில் அதிகரிக்கலாம் எனவும் யுனிசெவ் தெரிவித்துள்ளது.

## புணானையில்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மரணமடைந்த நபரின் உடல் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## ஏழு அடி உயர .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாண நகருக்குள் நுழைவோர் சிவபெருமானை வணங்கி புனிதமாக நுழைய வேண்டும். அதேபோல் குறித்த வீதியில் பயணிப்போர் பாதுகாப்பாக இறை பக்தியோடு பயணிக்க வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையிலும் இந்தசிலைபிரதிஷ்டைசெய்ய்ப்பட்டதாக சிவ பூமி அறக்கட்டளையினர் தெரிவித்தனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்
076 443 8622
kalaikkathiradvt@gmail.com



காலைக்கதிர் Kalaikkathir

# கொழும்பு தனியார் வைத்தியசாலை பணிப்பாளர் சபை ஆறு உறுப்பினர்களுக்கு வெளிநாட்டுப் பயணத் தடை!

## கொழும்பு நீதிவான் நீதிமன்று விதிப்பு

சிறுநீரக அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலையின் பணிப்பாளர் சபையின் 6 உறுப்பினர்களுக்கு வெளிநாட்டுபயணத்தடை கொழும்பு நீதிவான் நீதிமன்றால் விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மேற்படி தனியார் வைத்தியசாலை ஒன்றில் இடம்பெற்றதாகக் கூறப்படும் சிறுநீரக மோசடி தொடர்பாகக் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரான தரகர் விளக்கமறியில் வைக்கப்பட்டுள்ளார்.

இடைத்தரகருக்கான கட்டணத்துக்கு மேலதிகமாக சிறுநீரக கொடையாளிக்காக வழங்கப்படும் பணத்திலும் ஒரு பகுதியையும் மோசடி செய்துள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சிறுநீரகத்தைப் பெற்றுக்கொண்டு பணம் வழங்காமை தொடர்பில் பெண் ஒருவர் உள்ளிட்ட 4 பேர் பொரளை பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தனர்.

இந்த முறைப்பாட்டுக்கமைய, முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளுக்கமைய ஒருவர் கைதானார். சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் நான்கு தரகர்களை கைது செய்வதற்கான விசாரணைகள் இடம்பெறுகின்றன. கொழும்பு பிரதேசத்தில் குறைந்த வருமானம் பெறுபவர்களை இலக்கு வைத்து இந்த மோசடி செயற்பட்டு வந்துள்ளதாக தற்போதைய விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

சிறுநீரகம் தானம் செய்தவர்கள் வைத்தியசாலைக்கு வந்து பணம் கேட்டபோது இனி பணம் கேட்கமாட்டோம் என சத்தியப் பிரமாணம் எடுத்துள்ளதாக தெரியவந்துள்ளது. அதில் முன்னாள் பொலிஸ் உயரதிகாரி ஒருவர் தலையிட்டுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த கடத்தல் தொடர்பாக பொலிஸில் முறைப்பாடு செய்தவர்கள் சட்ட வைத்தியரிடம் முன்னிலைப்படுத்தப்பட்டதையடுத்து, அவர்களில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சிறுநீரகங்களைத் தானமாக வழங்குவதற்கு முன்னர் தமக்கு பெரும் தொகை வழங்குவதாக உறுதியளிக்கப்பட்ட போதிலும், அவ்வாறு எந்த பணத்தொகையும் வழங்கப்படவில்லையென முறைப்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.

வறுமையில் உள்ள ஒருவரிடமிருந்து எடுக்கப்பட்ட சிறுநீரகம் வெளிநாட்டவரொருவருக்கு பொருத்தப்பட்டதாக இதுவரை நடத்தப்பட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்துவதற்காக ஏழு பேர் கொண்ட குழுவொன்றையும் சுகாதார அமைச்சு நியமித்துள்ளதுடன், குறித்த தனியார் வைத்தியசாலையில் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகளை தற்காலிகமாக இடைநிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# யாழ். குடாநாட்டு கிணற்று நீரை குடிக்க பயன்படுத்தலாமா ஆய்வுரீதியாக பரிசோதித்து மக்களுக்கு அறிவிக்கவேண்டும்!

## செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் கோரிக்கை



யாழ். குடாநாட்டின் கிணற்று நீரை குடிப்பதற்கு பயன்படுத்தலாமா என்பது பற்றி பல்கலைக்கழக துறை சார்ந்த அதிகாரிகள் அரசியல் பிரதிநிதிகள் ஆய்வுரீதியாகப் பரிசோதனைகள் மற்றும் கலந்துரையாடல்களை நடத்தி மக்களுக்கு அறிவிக்கவேண்டும் என கலாநிதி ஆறு.திருமுருகன் ஊடகங்கள் ஊடாகக் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

யாழ். குடாநாடு மட்டுமன்றி வடபகுதி எங்கும் போத்தல் தண்ணீரின் ஆதிக்கம் வலுப்பெற்று மக்களின் பணம் வீண்விரயமாகிறது.

அது மட்டுமன்றி, போத்தல் தண்ணீருக்கான மக்களின் பணம் தென்னிலங்கை செல்கிறது. ஏழை வீட்டின் மரண சடங்கு முதல் தண்ணீர் போத்தலால் பணம் மேலதிக செலவாகிறது.

கடந்த சில காலத்துக்கு முன்பாக கிணற்று நீரில் ஒயில் கலந்துவிட்டது, நீர் மாசடைந்து விட்டது மற்றும் ஊற்றுக்கள் பயனற்றுவிட்டன என பல போராட்டங்கள் கலந்துரையாடல்கள் என தொடர்சியாக இடம்பெற்றன. தற்போது இவை அமைதியாகிவிட்டன.

இதனைப் பயன்படுத்தி அன்று ஆரம்பித்த தண்ணீர் போத்தல் வியாபாரம் இன்று மரணசடங்குகள், வீட்டுவிழாக்கள், கலை நிகழ்வுகள் மற்றும் மண்டப விழாக்கள் என அனைத்து இடங்களிலும் கொடிகட்டிப் பறக்கிறது. போத்தல் தண்ணீரை பயன்படுத்தலாமா எங்கு எப்படி தயாராகுறது இவைதொடர்பில் வெளிப்படுத்தல்கள் இருக்கின்றனவா?

ஆரம்ப காலங்களில் ஆலயங்களில் உள்ள கிணறுகளின் தண்ணீரை விரும்பிக் குடிப்பார்கள் அதனைத் தீர்த்தம் என்றே குடிப்பார்கள். வீடுகளிலும் அவ்வாறே கிணற்றுநீரைப் பயன்படுத்தினார்கள்.

யாழ்ப்பாணத்து கிணற்று தண்ணீர் என்றாலே விரும்பி குடித்த காலம் மாறி விட்டது. இன்று கிணற்றில் தண்ணீர் அள்ளினாலே பிரச்சினை என்கிறார்கள். அந்தளவிற்கு போத்தல் தண்ணீரின் பயன்பாடு அதிகரித்து பணம் வீண்விரயமாகி வருகிறது. எனவே, யாழ்ப்பாணத்து கிணற்று நீரைப் பயன்படுத்தலாமா இல்லையா என்பது பற்றி யாழ்ப்பாண பல்கலைக்கழக விஞ்ஞானத் துறையைச் சார்ந்தவர்கள், விவசாயத் துறைசார்ந்தவர்கள், பொருளியல் துறைசார்ந்தவர்கள், அரசியல் பிரதிநிதிகள் ஒன்று கூடி குடாநாட்டின் மக்கள் கிணற்று நீரை பயன்படுத்தலாமா என்பது பற்றி ஆய்வுகள் மேற்கொண்டு பொதுமக்களுக்கு சாதக பாதகங்களை அறிவிக்க வேண்டும்.

உண்மையாகவே மக்களின் பணத்தில் படித்தவர்கள், பட்டம்பெற்றவர்கள் என்ற உணர்வு இருந்தால் – இந்த தேச மக்கள் மீது உணர்வு இருந்தால் – தண்ணீருக்காகக் குரல் கொடுக்கவேண்டும்.

யாழ் குடாநாட்டு தண்ணீர் பழுதடைந்து விட்டது எனப் பலரும் குரல் கொடுத்தார்கள் என்ன நடந்தது. வடக்குமாகாண சபை இருந்தது. முதலமைச்சர் உட்பட பல பிரதிநிதிகள் இருந்தார்கள் என்ன செய்தார்கள்? கிணற்று நீருக்கு முடிவுதான் என்ன? இது தொடர்கதையா? எனவே இந்த விடயம் தொடர்பில் துறைசார்ந்தவர்கள் அக்கறை எடுத்து இதற்கான சரியான முடிவை அறிவிக்க வேண்டும். – என்றார்.

# சுற்றுச்சூழலுக்கு ஏற்பட்ட சேதங்களுக்கான இழப்பீடுகளைப் பெறுவதில் மந்தகதி நிலை!

## திஸ்ஸ அத்தநாயக்க சுட்டிக்காட்டு



2020 ஆம் ஆண்டு இலங்கை கடற்பரப்பில் 'நியூ டயமன்ட்' கப்பல் அழிக்கப்பட்டதன் மூலம் சுற்றுச்சூழலுக்கு ஏற்பட்ட சேதத்துக்கு இழப்பீடாக 344 கோடி ரூபா கோரப்பட்டது.

இருப்பினும் ஒரு கோடியே 20 லட்சம் மட்டுமே வழங்கப்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சின் செலவினங்கள் மீதான குழுவிவாதத்தின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்தோடு எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பலின் தீயால் ஏற்பட்ட இழப்பு ஒரு கோடியே 40 லட்சம் டொலர் என மதிப்பிடப்பட்ட போதிலும் 78 லட்சம் டொலர் மட்டுமே கிடைத்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

'இந்த மக்களிடம் இருந்து பெறப்பட்ட நட்டஈட்டை மீளப்பெறும் செயற்பாடுகள் மந்தகதியில் இடம்பெற்று வருகின்றன என்றும் திஸ்ஸ அத்தநாயக்க குற்றம் சாட்டினார். இதற்காக பெருமளவிலான பணத்தைச் செலவழித்து குழுக்கள் அறிக்கைகளை தயாரித்த போதும் அவை சரியானமுறையில் பயன்படுத்தப்படவில்லை என திஸ்ஸ அத்தநாயக்க குறிப்பிட்டார்.

# தேசிய இன விகிதாசார அடிப்படையில் காணிகளை பிரிக்கப்படாவிட்டால் சட்ட நடவடிக்கை எடுப்போம்!

## சாணக்கியன் எச்சரிக்கை



தேசிய மகாவலி சட்டத்தின் கீழ் காணிகள் தேசிய இன விகிதாசார அடிப்படையில் பிரிக்கப்படவேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்றஉறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் விசேட ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பி கருத்து வெளியிடும் போதே இவ்வாறு தெரிவித்திருந்தார், இதன்போது கருத்து வெளியிட்ட அவர்

தேசிய மகாவலி சட்டத்தின் கீழ் காணிகள் தேசிய இன விகிதாசார அடிப்படையில் பிரிக்கப்படவேண்டும். ஆனால் 94 சத வீதமான காணிகள் பெரும்பான்மையினருக்குப் பிரிக்கப்பட்டுள்ள நிலையில் மிகுதிக் காணிகள் சிறுபான்மை மக்களுக்கு பிரிக்கப்பட வேண்டும்.

மிகுதிக் காணிகள் பகிரப்படாவிடின் இதற்கு எதிரான சட்ட நடவடிக்கையை நாம் முன்னெடுப்போம். அல்லது இது தொடர்பாக உங்களுடன் பேசுவதற்கும் நாம் தயாராகவே உள்ளோம். – எனத் தெரிவித்திருந்தார்,

இதனைத் தொடர்ந்து விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரை கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கி யன் சந்தித்து பேசியிருந்தார்.

இந்தநிலையில் தேசிய மகாவலி சட்டத்தின் கீழ் காணிகளை பிரிக்கும் நடவடிக்கைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன என அமைச்சர் கூறியிருந்தார்.

அத்துடன் இது தொடர்பில் அடுத்த வாரம் கூட்டம் ஒன்றும் நடைபெறவுள்ளதுடன் அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

# க.பொ.த. உயர்தரம் கற்பதற்கான புலமைப்பரிசில் வழங்க ஜனாதிபதி வேட்பாளர் நிதியத்தால் விண்ணப்பங்கள் கோரல்

2024 ஆம் ஆண்டு உயர்தரம் கற்கும் மாணவர்களுக்கு 3 ஆயிரம் புலமைப்பரிசில் வழங்க ஜனாதிபதி வேட்பாளர்நிதியம் விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

2021 க.பொ.த சாதாரண தர சித்தியடைந்த மாணவர்கள் விண்ணப்பிக்கலாம். குடும்ப வருமானம் மாதம் ரூபா 75 ஆயிரத்துக்கும் குறைவாக இருத்தல் வேண்டும்.

ஒரு கல்வி வலயத்திலிருந்து 30 மாணவர்கள் வீதம் நாடாளாவிய ரீதியில் உள்ள 100 வலயங்களுக்கு புலமைப் பரிசில் வழங்கப்படும்.

மாதாந்தம் 5 ஆயிரம் ரூபா வீதம் 24 மாதங்களுக்கு வழங்கப்படும்.

விண்ணப்பப் படிவங்களை பாடசாலை அதிபர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி 23 டிசெம்பர் 2022 ஆகும்.

காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## பாதீடு இன்று 'பாஸ்' ஆகும்!

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டின் நிதி அமைச்சர் என்ற முறையில் சமர்ப்பித்த அடுத்த ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் (பாதீடு) மீது இறுதி வாக்கெடுப்பு, மூன்றாவது வாசிப்பின் மீது அங்கீகாரம் அளித்தல், இன்று மாலை நாடாளுமன்றத்தில் இடம்பெறுகின்றது.

41 ஆயிரம் கோடி ரூபாவை பாதுகாப்பு அமைச்சுக்கென ஒதுக்கீடு செய்திருக்கும் இந்த வரவு – செலவு திட்டத்தை, அந்த அமைச்சுக்கு இந்த முறையும் மேலும் அதிக தொகையைக் கூட்டி ஒதுக்கீடு செய்திருப்பதை ஆட்சேபித்து, எதிர்த்து வாக்களிக்கவே தமிழர் தரப்பின் பிரதான கட்சியான தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பெரும்பாலான எம்.பிக்கள் விரும்புகின்றனர்.

எனினும், வேறு அரசியல் காரணங்களுக்காக, இந்த வரவு – செலவு திட்டத்தை எதிர்த்து வாக்களிக்காமல் இருக்கும் கட்டாயத்துக்கு கூட்டமைப்பு தள்ளப்பட்டுள்ளது.

வரவு – செலவுத் திட்டக் குழுநிலை விவாதத்தின் போது, பாதுகாப்பு அமைச்சுக்கான ஒதுக்கீட்டை கூட்டமைப்பு வாக்களிப்புக்கு விடக் கோரி, அடையாளத்துக்கு தமது எதிர்ப்பை அந்த வாக்கெடுப்பில் பதிவு செய்து கொண்டது.

மற்றும்படி இந்த வரவு – செலவுத் திட்டத்தை எதிர்க்காத நிலைப்பாட்டையே கூட்டமைப்பு கைகொள்ளுகின்றது.

இன்று வரவு – செலவு திட்டத்தின் மூன்றாம் வாசிப்பின் போது பாதுகாப்பு அமைச்சுக்கு அதிக ஒதுக்கீடு செய்த இந்த வரவு – செலவுத் திட்டத்தை கூட்டமைப்பு ஆட்சேபித்து, கண்டித்து, அதன் மீது உரையாற்றினாலும், பெரும்பாலும் அதனை எதிர்த்து வாக்களிக்காத நிலைப்பாட்டையே அது எடுக்கும் என்று கருதப்படுகின்றது.

இது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு இன்று நாடாளுமன்றத்தில் கூடி முடிவெடுத்த பின்னரே, அதன் இறுதியான நிலைப்பாடு யாது என உறுதியாக அறிய முடியும்.

ஆயினும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தற்போது ஆரம்பிக்க இருக்கிறார் எனக் கூறப்படும் – தேசியப் பிரச்சனைக்குத் தீர்வு காணும் முயற்சி தொடர்பில், சாதகமான சமிக்ஞையை காட்டும் அம்சமாக இன்றைய வாக்கெடுப்பிலும் கூட்டமைப்பு பெரும்பாலும் பங்கு கொள்ளாது என்றே கருதப்படுகின்றது.

வரவு – செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பின் மீதான வாக்கெடுப்பில் பெற்றமை போல இன்றைய மூன்றாவது வாசிப்பிலும் ரணில் அரசு போதிய ஆதரவை எவ்வித நெருக்கடியும் இன்றி பெற்றுக் கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

கூட்டமைப்பு இந்த வரவு – செலவுத் திட்ட வாக்களிப்பில் பங்கு கொள்ளாமல் தவிர்ப்பது, அந்த வரவு – செலவுத் திட்டத்தின் மீதான ரணில் அரசின் வெற்றியை மேலும் இலகுவானதாக்கி வலுப்படுத்தும்.

# மூன்று குடும்பங்கள் 200 குடும்பங்களின் வாழ்வாதாரத்தை இல்லாதொழிக்க முயற்சி?

## பூநகரி சிறீ முருகன் கடற்தொழிலாளர் சங்கம் வேதனை




கிராஞ்சியில் கடல் அட்டை பண்ணைகள் வேண்டாம் என போராட்டம் நடத்தும் மூன்று குடும்பங்களைச் சேர்ந்தவர்கள், சுமார் 200 குடும்பங்களின் வாழ்க்கையை கெடுக்கும் வகையில் செயற்படுகின்றமை கவலை அளிப்பதாக பூநகரி சிறீ முருகன் கடற்தொழிலாளர் சங்கத்தின் செயலாளர் தம்பிப்பிள்ளை மகேந்திரன் தெரிவித்தார்.

யாழ் ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில், மேலதிக வாழ்வாதாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக கடலட்டைப் பண்ணைகளை கிராஞ்சி கடற்றொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த சுமார் 203 உறுப்பினர்கள் விண்ணப்பித்து விட்டுக் காத்திருக்கின்றனர்.

இந்நிலையில் மூன்று குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தங்களுடைய சுயலாபத்துக்காகவும் குறுகிய நலனுக்காகவும் கடலட்டைப் பண்ணைக்கு எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றனர். சுமார் 266 கடற்றொழிலாளர்களை உறுப்பினர்களாகக் கொண்ட கிராஞ்சி கடற்றொழிலாளர் சங்கத்தால், நெக்டா திணைக்களத்துக்கு 174 உறுப்பினர்களின் கடலட்டைப் பண்ணைக்கான விண்ணப்பங்கள் கையளிக்கப்பட்டிருக்கின்றன.

கிராஞ்சியில் வெளியாருக்கு அட்டை பண்ணை வழங்கப்படவில்லை. அவ்வாறு வழங்கப்பட்டால் அதை நாம் எதிர்ப்போம்.

ஆனால் கிராஞ்சியில் போராட்டம் நடத்துபவர்கள் பினாமிகளின் பெயரில் பண்ணைகளை அமைத்துவிட்டு பண்ணை வேண்டாம் எனப் போராடுகின்றனர்.

எமது பகுதி மீனவர்களின் வாழ்வாதாரத்துக்காக வழங்கப்பட மற்றும் வழங்கப்படவுள்ள அட்டைப் பண்ணைகளைத் தொடர்ச்சியாக சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆகவே, ஊடகங்கள் கிராஞ்சியில் அட்டை பண்ணை யாருக்கு வழங்கப்படுகிறது. கடலுக்கு பாதிப்பாக அமையப்பெற்றதா என்ற உண்மை வெளிப்படுத்துவதோடு நேரடியாக வருகை தந்து உண்மை நிலையை வெளிப்படுத்த வேண்டும். – எனக் கோரிக்கை விடுத்தார்.

# அரச அதிகாரிகளின் விருப்பத்துக்கே எல்லை நிர்ணயம் செய்யப்படுகின்றது!

## வினோ நோகராதலிங்கம் சாடல்



மக்கள் பிரதிநிதிகளினதும், மக்களினதும் விருப்பத்துக்கு முரணாக உள்ளூராட்சி மன்றங்களின் எல்லை தொகுதிகள் நிர்ணயம் செய்யப்படுவதை உடனடியாக நிறுத்த வேண்டும்.

அரச அதிகாரிகளின் விருப்பத்துக்கு அமையவே எல்லை நிர்ணயம் செய்யப்படுகிறது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் விவசாயம், நீர்பாசனம் மற்றும் கடற்றொழில் ஆகிய அமைச்சுக்கள் மீதான நிதி ஒதுக்கீட்டின் குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தொகுதி தொடர்பான எல்லை நிர்ணய குழுவின் கூட்டங்கள் மாவட்ட ரீதியில் இடம்பெறுகின்றன.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை உரிய காலத்தில் நடத்த வேண்டுமாக இருந்தாலும் அவசர அவசரமாக எல்லை மீள்நிர்ணயம் செய்யப்பட்டு மக்கள் பிரதிநிதிகளினதும், மக்களின் விருப்பமில்லாமல், அதிகாரிகளின் விருப்பத்துக்கமைய எல்லை நிர்ணயம் செய்யப்படுவது. உண்மையான நோக்கத்துக்கு அப்பாற்பட்டதாகும்.

அரச அதிகாரிகளின் விருப்பத்துக்கமைய மாத்திரம் எல்லை நிர்ணயம் செய்யப்படுகிறது, இது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். நடைமுறையில் உள்ள தேர்தல் முறைமைக்கு அமைய தேர்தல் நடத்தப்பட வேண்டும். எல்லை நிர்ணயங்களைத் தமது விருப்பத்துக்கு அமையவே அரசாங்கம் நிர்ணயம் செய்ய முயற்சிக்கிறது, இது முழுமையாக நிறுத்தப்பட வேண்டும்.

வனவளத் திணைக்களத்துக்குச் சொந்தமான காணிகள் பயிர்செய்கைகளுக்காக வழங்கப்படும் என விவசாயத்துறை அமைச்சர் குறிப்பிட்டார், ஆனால் இதுவரை அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை.

வடக்கு மாகாணத்தில் மக்கள் காலம் காலமாக விவசாயம் செய்த காணிகளை வனவளத்துறை திணைக்களம் கையகப்படுத்தியுள்ளது. ஆகவே இந்த விடயம் தொடர்பில் விவசாயத்துறை அமைச்சு உரிய கவனம் செலுத்த வேண்டும்.

பொருளாதாரப் பாதிப்பில் இருந்து மீள வேண்டுமாயின் நாட்டில் விவசாயத்துறை மேம்படுத்த வேண்டும். ஆனால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் விவசாயக் காணிகளை வனவளத்துறை திணைக்களம் ஏதாவதொரு காரணத்தைக் குறிப்பிட்டுக் கொண்டு சுவீகரிப்பதையே பிரதான இலக்காக கொண்டுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிலவும் மீனவர் பிரச்சினை, விவசாய பிரச்சினை தொடர்பான கூட்டங்களுக்கு மக்கள் பிரதிநிதிகள் அழைக்கப்படுவதில்லை. வடக்கு மாவட்டத்தில் ஒருங்கிணைப்பு குழு நியமிக்கப்படாத காரணத்தால் அரச அதிகாரிகள் தன்னிச்சையாகச் செயற்படுகிறார்கள்.

மக்கள் பிரநிதிகள் மக்கள் பிரச்சினை தொடர்பில் அவதானம் செலுத்த உரிய வழிமுறை காணப்படவில்லை. அனைத்துப் பிரச்சினைகளுக்கும் நாடாளுமன்றத்தின் ஊடாக மாத்திரம் தீர்வு காண முடியாது, ஆகவே, மக்கள் பிரச்சினைகளுக்கு தீர்வு காண மாவட்ட மட்டத்தில் உரிய நடவடிக்கை எடுக்க அரசாங்கம் அவதானம் செலுத்த வேண்டும்.– என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# ஆயிரத்து 753 குடும்பங்களுக்கு இதுவரையில் இழப்பீட்டு பணியகமூடாக இழப்பீடு வழங்கல்!



## என்கிறார் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ

இழப்பீட்டு பணியகம் ஊடாக ஆயிரத்து 753 குடும்பங்களுக்கு இதுவரை இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது உரையாற்றிய அவர் –

காணாமல்போனோர் அலுவலகத்தின் பணிகளை வேகமாக முன்னெடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இறுதிப்படுத்தப்பட்ட ஆயிரத்து 653 ஆவணங்கள் இதுவரை எமக்குக் கிடைக்கப்பெற்றுள்ளன.

அத்துடன், இழப்பீடு தொடர்பான விசாரணைகளின் பிரகாரம் ஆயிரத்து 753 குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது.

3 ஆயிரத்து 320 ஆவணங்களுக்கு (குடும்பங்களுக்கு) இழப்பீடு வழங்கப்படவுள்ளது. அதேபோல 5 ஆயிரத்து 246 ஆவணங்கள் எஞ்சியுள்ளன.

இந்தியாவில் இருந்து 11 ஆயிரத்து 780 பேர் மீண்டும் நாடு திரும்பியுள்ளனர். இவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதேபோல போதைப்பொருள் ஒழிப்பு சம்பந்தமாக 9 மாகாணங்களிலும் செயலணி உருவாக்கப்படும். இதன் முதற்கட்டமாக வடக்கில் ஆளுநர் தலைமையில் நிறுவப்பட்டுள்ளது. – எனத் தெரிவித்துள்ளார்.

# கட்டணத் திருத்தத்தின் பின் ரயில் திணைக்களத்துக்கு மாதாந்தம் 100 கோடி ரூபா இலாபம் கிடைக்கின்றதாம்!

## அமைச்சர் பந்துல தெரிவிப்பு



ரயில் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டமையையடுத்து ரயில்வேத் திணைக்களம் மாதாந்தம் 100 கோடி ரூபா இலாப மீட்டுகின்றது. எனினும் இந்த இலாபம் எரிபொருள் கொள்வனவிற்கான செலவை மாத்திரமே ஈடுசெய்கிறது.

மாறாக சம்பளம் மற்றும் மேலதிக வேலை நேர கொடுப்பனவு என்பவற்றுக்கான 960 கோடி ரூபா இதன் மூலம் ஈடுசெய்ய முடியாது என அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நடைபெற்ற போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

இலங்கை ரயில்வேத் திணைக்களத்தை தனியார்மயப்படுத்துவதற்கான எந்தவொரு தீர்மானமும் எடுக்கப்படமாட்டாது. ரயில்வே பொறியியலாளர்கள் , கட்டுப்பாட்டாளர்கள் உள்ளிட்டவர்களுடன் ரயில் சேவையை பொது போக்குவரத்தாக நஷ்டம் ஏற்படாத வகையில் எவ்வாறு நிர்வகித்துச் செல்வது என்பது தொடர்பான கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

திணைக்களத்தால் தீர்மானங்களை எடுப்பதில் காணப்படும் சிக்கலால் , பல பிரச்சினைகள் உருவாகியுள்ளன. எனவே, ரயில்வே அதிகாரசபையை உருவாக்கி, அதன் ஊடாக ரயில் சேவைகளை முன்னெடுத்து செல்வது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் ரயில்வேத் திணைக்களம் வருடாந்தம் 1,000 கோடி ரூபா நஷ்டமடைந்துள்ளது. இந்த வருடத்தில் ஏற்பட்ட எரிபொருள் விலையேற்றத்துடன், அதற்கான செலவைக் கூட நிர்வகிக்க முடியாத நிலைமை ரயில்வேத் திணைக்களத்துக்குக் காணப்பட்டது. இதன் காரணமாக மாதாந்தம் 30 கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டது. எனினும் வருமானம் 30 – 50 கோடிக ரூபாக்களகவே காணப்பட்டன.

இதனைக் கருத்திற் கொண்டு ரயில்வே கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டதையடுத்து , இலங்கை வரலாற்றில் முதன்முறையாக ரயில்வேத் திணைக்களம் மாதத்துக்கு 100 கோடி ரூபாவுக்கும் அதிக இலாபத்தைப் பெறுகின்றது. எவ்வாறிருப்பினும் இந்த இலாபம் எரிபொருளைக் கொள்வனவு செய்வதற்கான செலவிற்காக மாத்திரமே பயன்படுத்தப்படுகிறது.

சம்பளத்துக்காக செலவாகும் 700 கோடி ரூபா மற்றும் மேலதிக வேலை நேர கொடுப்பனவிற்காக வழங்கப்படும் 260 கோடி ரூபா என்பவற்றையும் ஈடு செய்வதற்கான வருமானத்தை ரயில்வேத் திணைக்களம் இன்னும் பெற்றுக் கொள்ளவில்லை. எனவே தான் சிறந்த முகாமைத்துவ முறைமைகளைப் பயன்படுத்தி இந்த நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம். – என்றார்.



# ஓர் இனம் வாழவேண்டுமாயின் அந்த இனத்தின் இருப்பையும் பரம்பலையும் உறுதிசெய்யவேண்டும்!

## வைத்திய கலாநிதி பாலகோபி கருத்து

ஓர் இனம் வாழவேண்டுமாயின் அந்த இனத்தின் இருப்பையும் பரம்பலையும் உறுதிசெய்ய வேண்டும் என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீட விரிவுரையாளரும் சிறுநீரக தொகுதி அறுவை சிகிச்சை நிபுணருமான பா.பாலகோபி யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட கூவர் அரங்கில் நடைபெற்ற நூல் வெளியீட்டின் போது உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

யாழ்ப்பாணத்தில் இன்று குழந்தையின்மைப் பிரச்சினை தீவிரம் பெற்றுள்ளது. குழந்தையின்மைக்கான மருத்துவத் தேவைப்பாடுடையவர்களாக 50 வீதம் பெண்களும் 50 வீதம் ஆண்களும் காணப்படுகின்றனர்.

ஆனால், சமூகத்தில் பெண்களை மட்டுமே குறை கூறுகின்றோம். பெண்களை மட்டுமே மருத்துவத் தேவைப்பாடுடையவர்களாகப் பார்க்கின்றோம். இந்த நிலைமை மாற்றம் பெறவேண்டும்.

குழந்தையின்மைப் பிரச்சினைக்காக ஆண்கள் உண்மையில் சிறுநீரக சனனித் தொகுதி மருத்துவரைத்தான் நாட வேண்டும்.

ஆனால், இது தொடர்பான போதிய அறிவு விழிப்புணர்வு எவரிடமும் இல்லை. அத்துடன், இந்தத் துறை உலகளாவிய ரீதியில் வளர்ச்சியடையாத துறையாகவே இருக்கின்றது. இந்ததுறையை விருத்தி செய்ய வேண்டியது காலத்தினுடைய கட்டாயமாகக் காணப்படுகின்றது.

ஆண்களினுடைய விந்து உருவாக்கத்திலிருந்து விந்து கடத்தப்படுகின்ற பாதையிலிருந்து கருத்தங்காமை பிரச்சினை ஏற்படுகின்றது.

முட்டையைத் தேடி மில்லியன் கணக்கான விந்தணுக்கள் செல்லவேண்டிய நிலை காணப்படுகின்றது. விந்தணுக்களின் எண்ணிக்கைகள் குறைகின்றபொழுது பிரச்சினை ஏற்படுகின்றது. வால்களற்ற விந்துக்களால் முன்னோக்கிச் செல்ல முடியாது. இவற்றாலும் கருக்கட்டலில் பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

உடல் வெப்பநிலை கூடுகின்றபொழுது அல்லது சுற்றாடல் வெப்பநிலை கூடுகின்றபொழுது அல்லது எம்மிடம் இருக்கின்ற புகைத்தல், மது உள்ளிட்ட தீய பழக்க வழக்கங்களாலும் இந்த விந்தணுக்களின் பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

இன்று எமது இளைஞர்கள் நீண்ட நேரம் வேலை செய்கின்றார்கள். பலர் சாரதிகளாகப் பணிபுரிகின்றார்கள். பத்து மணித்தியாலங்கள் தொடர்ந்து அந்த இருக்கையில் இருக்கின்ற பொழுது விந்துகள் இறந்துவிடுகின்றன. எனவே, இது தொடர்பில் கூடுதல் அவதானம் செலுத்தி போதிய மருத்துவ அறிவுறுத்தல்களைப் பின்பற்றவேண்டும்.

விந்துக்களையும் முட்டைகளையும் சேர்க்கின்ற பொறிமுறை தனியார் மருத்துவமனைகளில் மாத்திரமே காணப்படுகிறது.

அரச வைத்தியசாலைகளில் இல்லை. இதனால் ஏழைக்குடும்பங்கள் பெரும் பாதிப்பை எதிர்கொள்கின்றன. ஆதலால், தனியார் மருத்துவமனைகளில் இருக்கும் அத்தனை வசதி வாய்ப்புக்களும் அரச வைத்தியசாலைளிலும் ஏற்படுத்தப்படவேண்டும்.

எமது சமுதாயத்துக்காக – எம் இனத்தின் இருப்பை உறுதிப்படுத்துவதற்காக – நாம் அர்ப்பணிப்பானதும் ஆக்கபூர்வமானதுமான பல திட்டங்களைச் செயற்படுத்த வேண்டும். – என்றார்.

இந்நிகழ்வில் யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறீசற்குணராஜா, மருத்துவ பீட பீடாதிபதி ரா.சுரேந்திரகுமாரன், செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன், யாழ் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி யாழ்.மாவட்ட மேலதிக செயலாளர் ம.பிரதீபன், யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் உள்ளிட்ட மருத்துவ நிபுணர்கள், மருத்துவர்கள், விரிவுரையாளர்கள், ஆர்வலர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

வைத்தியர் பா.பாலகோபி வைத்தியர் சி.இரகுராமன் இருவரும் இணைந்து 'குழந்தையின்மை விளக்கங்களும் தீர்வுகளும்' என்ற நூலை எழுதி வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.

# அருணலு வெற்றியாளர்கள் கௌரவிக்கப்பட்டார்கள்!

பருத்தித்துறை, டிசெ. 08

கொமர்ஷல் வங்கி பருத்தித்துறை கிளையால் அருணலு புலமைப்பரிசில் வெற்றியாளர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

வங்கி கிளை முகாமையாளர் ஏ.ரி.அரவிந்தன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்வித் திணைக்களத்தின் பிரதிக்கல்விப்பணிப்பாளர் மோ.தெய்வேந்திரா கலந்துகொண்டு புலமைப்பரிசில் வெற்றியாளர்களைக் கௌரவித்தார்.

இந்தக் கிளையில் அருணலு சிறுவர் சேமிப்புக் கணக்கைப் பேணிவந்த பதினொரு வெற்றியாளர்களுக்கு பணப்பரிசில்களும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.






கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர்
Kalaikkathir

**இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.**

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## 'இவை கதைச்சுச் சரி வருமா?'



- செல்லத்துரை ரவீந்திரன் -

**அங்கம் - 204**

பிரபாகரனின் மரணத்தின் பின், புலம்பெயர் தளபதிகள், முகவர்கள் இடையே விடுதலைப் போராட்டத்தில் மேற்கொண்ட பாதைகள் பற்றி முரண்பாடுகளும் பிரிவினைகளும் தொடர்ந்தன.

அதுவரையும் சர்வதேச பிரதிநிதியாக இருந்த கே.பி. ஸ்ரீலங்கா வந்து சேர நேரிட்டது. அவரது அணியினர் – அவர்களுக்கு எதிரானவர்கள் என கிளம்பியவர்களின் தனிப்பட்ட குரோதங்கள் புலம்பெயர் பரப்புகளிலே பாசிகளாகப் படர்ந்து நோக்கங்களைத் திசை திருப்பின. நம்பிக்கை தரும் விதத்தில் – யாவரும் நம்பிக்கை வைக்கும் போக்கில் – முன்னைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, கிளாஸ்கோ சென்றபோது அவருக்கு எதிராக விடுதலை புலிகளால் நடத்தப்பட்ட போராட்டம், உணர்வு குன்றாமல் அவர்கள் புலம்பெயரில் இயங்குகிறார்கள் என்பதை உறுதிப்படுத்தியது.

ஆனால், அதன் பின் சுமந்திரன் அமெரிக்கா சென்று, அங்கிருந்து கனடா போன வேளை, அவருக்கு எதிராக நடத்தப்பட்ட போராட்டம் சர்வதேசங்களை, தமிழ் மக்களை வியப்புடன், விரக்தியுடன் பார்க்க வைத்தன.


பகத்சிங்

வளர்ந்து கொண்டிருந்த இப்படியான பாசிகள்தான் 13 வருடங்களின் பின்னும் அவர்கள் ஆட்டிப் படைப்பதைத்தான் சுவிஸ் நகரத்தின் மாவீரர் தின நடப்புக்களில் பேசப்பட்டவையும் அதற்கான பதில் வரைவுகளும் எடுத்துக்காட்டுகின்றன. 'எனது மக்களின் விடுதலைக்கான' என்ற நூலின் பேச்சாளரான அன்ரன் பொன்ராசா அதனைத் தமிழ்ச்செல்வன் தன்னிடம் தந்து, வெளியிடச் சொன்னார் என்று சொன்னால் அது நம்பக்கூடியது அல்ல. லூட்சேன் தமிழ் மன்ற பிரச்சினையில் தமிழ்ச்செல்வன் எப்படி வெளியேறினார் என்பதை மக்கள் அறிவார்கள் என்கிறார்கள், மறு தரப்பினர். அந்தத் தரப்பினர், அப்படியானால், ஆரம்பகால போராளிகள் இருந்தும் பதிப்பிற்கு முன் அன்ரன் அதனை ஏன் ஆய்வுக்கு உட்படுத்தவில்லை என வினவுகிறார்கள். அன்ரன் நூல் பற்றி கேட்கப்பட்ட கேள்விகளுக்குத் தந்த சுருக்கப் பதில்களில் முக்கியமாக கே.பி. சர்வதேச பிரதிநிதியாக நியமிக்கப்பட்ட கடிதம் தனக்கு கிடைத்தமை எப்படி, பிரபாகரனை ஏன் 'மேதகு' எனக் குறிப்பிடவில்லை, 'தமிழீழ விடுதலையை நெஞ்சில் நிறுத்தி தம்முயிரை ஆகுதியாக்கிய அனைத்துப் போராளிகளுக்கும் பொது மக்களுக்கும் சமர்ப்பணம்' என்று ஏன் எழுதப்பட்டது, ஆனால், 'தம் இன்னுயிரை ஆகுதியாக்கிய போராளிகள்தான் மாவீரர்கள்' என்று ஏன் குறிப்பிடவில்லை என்ற சர்ச்சைகள் குறித்து முக்கியமாக 13 நவம்பர் 2022 பேர்ன் நகரில் இடம் பெற்ற அறிமுக விழாவில் தான் கலந்து


நேதாஜி

கொண்ட போது மீண்டும் அதே கேள்விகளைக் கேட்டு, அந்த கேள்விகளுக்கும் அநாகரீகமான முறையில் வட்டம் போட்டு, தன்னை நடுவில் வைத்து, பல்வேறு ஒலித் தோரணைகளில் மேலும் கேள்விகள் தொடுத்து 'இது கதைச்சுச் சரி வராது. கை,கால் எடுத்தால்தான் சரி வரும்' என்ற வெருட்டல் சொற்பிரயோகங்களும் இடையிடையே எகிறிப் பாய்ந்து, இன்னும் இரண்டு நாளைகளில் இவை நிறுத்தப்படாவிட்டால் பகிஷ்கரிக்க கோரி மக்களுக்கு அறிக்கை அனுப்பப்படும் என வெருட்டப்பட்டதாக அன்ரன் குறிப்பிடுகிறார். ஆனால் தாங்கள் தொடர்ந்து பயணிப்போம், நீங்கள் செய்வதே செய்யுங்கள் எனப் புத்தக குழு எதிர்வாதம் செய்ததற்கு மறுப்பாக, புத்தகத்துக்குப் பணம் தந்தவர் பிரான்ஸ் நாட்டில் இருக்கும் 'அரிசி' தயா என்பவர்தான், அவரது பின்னணி அனைவரும் அறிந்தவை, மக்களே இவர்களை அறிந்து கொள்ளுங்கள் என்பது தான் வரலாறுகளாக முக்கியத்துவம் பெறுகின்றன.

இங்கே நடக்கும் இந்த வரலாறுகளின் எதிரொலிகள் நாட்டில் இருக்கும் பழைய போராளிகளையும், அரசியல்வாதிகளையும் கூட பாதிக்கலாம். அவர்கள் யாரை நம்பிப் போவது, எந்த அரசியல் திக்கு நிர்சனமாக மக்களுக்கு காட்டப்பட்டிருக்கிறது? இவைதான் கடத்தப்பட வேண்டிய வரலாறாக உலா வருகின்றன.

பகத்சிங், கப்பலோட்டிய தமிழன் வ.உ.சியின் கப்பல் நிறுவனத்தை திவாலாக்கி அவரது கைதுக்கும் காரணமான திருநெல்வேலி வரிப் பொறுப்பாளர் ரொபேர்ட் ஆஷ பரலோகம் அனுப்பிய வாஞ்சிநாதன், நேதாஜி போன்றவர்களின் வரலாறுகள் நிலைப்பதற்கு இந்தியா சுதந்திரம் பெற்றதுதான் காரணம். சுதந்திரம் பெற்றுக் கொள்ளாமல் அடிமை நாடாகவே இந்தியா தொடர்ந்து இருந்தால், அவர்கள் இன்றும் பயங்கரவாதிகளாகவே பிரசாரப்படுத்தப்பட்டு, பட்டியலிடப்பட்டிருப்பார்கள். தென்னாபிரிக்காவின் நெல்சன் மண்டேலா, சிம்பாப்பேயின் ரோபேர்ட் முகப்பே போன்றோரின் வரலாறுகள் வேறானவை அல்ல.

இரண்டாம் மகாயுத்தத்தில் தோற்றுப் போன ஜேர்மனியின் விதியை – வரலாற்றை – நிர்ணயித்து எழுதியவர்கள் வெற்றி பெற்ற அமெரிக்கா, பிரித்தானியா, ரஷ்யாவே. அதே போல்தான் ஜப்பானின் வரலாற்றையும் தீர்மானித்தார்கள். ஆதலால் எமது வரலாறு தமிழ் மக்களாலேயே எழுதப்படுவதாவதற்கு அவர்கள் வெற்றி கொள்ளும் வழிகளைத் தேடிக் கொள்ள வேண்டும்.

அன்றில் அது தோற்றுப் போன ஆப்பிரிக்காவின் பயாவிறா(Biafra)வின் வரலாறுகளாகத்தான் முடியும்.

நடந்த வரலாறுகளின் சித்திரங்கள் வரையப்பட முதலில் சுவர் இருக்க வேண்டும். அதற்கான நோக்கத்தை விட்டு விட்டு, தொடர்ந்து இவற்றையே தங்களது தற்பெருமைகளுக்கும் செருக்குக்கும் பிடிவாதத்துக்கும் சொல்லிக் கொண்டிருப்பதில் தமிழ் மக்கள் எந்த பிரயோசனத்தையும் காணப்போவதில்லை.

கப்பல்கள் அவற்றைச் சுற்றி இருக்கும் நீரினால் தாழ்ந்து மூழ்கடிக்கப்படுவதில்லை. ஆனால் அவற்றுள் உட்புகும் நீரினால்தான் அவை மூழ்குகின்றன. ஆதலால் சுற்றங்களில் ஸ்ரீலங்காவினால் நடத்தப்படுபவை இவற்றினில் உட்புகாது பார்த்துக் கொள்ள வேண்டியது அவசியம்.

### வீட்டில் பூச்சிகள்


தமிழ் மக்கள் தங்கள் எதிர்காலக் கனவுகள், அவர்கள் காண நினைத்த சுயாட்சி, பின் தனி நாடு எல்லாம் கண்ணீருடன் கரைய, தன்னுடைய இருந்த பழைய சாக்கை தலையில் மழைத் தூறலுக்கும் மேலில் பனியையும் தாக்குப் பிடிக்க அணிந்து கொண்டு, நிதம் நிதம் தேயிலைக் கொழுந்து பறிக்கச் செல்லும் இந்தியப் பெண் தொழிலாளி போல வழியற்றவர்களாக, தமிழ அரசியல்வாதிகள் மீண்டும் பேச்சுக்கு போகிறார்கள். சுடும் என்று தெரிந்தும் விளக்கில் போய் முட்டி முட்டி விழுமாம் வீட்டில் பூச்சி. ஏமாற்றப்படுவோம் என தெரிந்தும், ஏமாறும் இந்த அரசியல்வாதிகள். ஏமாற்றப்படும் தமிழ் மக்கள். இது தொடர்கதைதான்.

சுதந்திரம் அடைந்த நாள்களில் இருந்து மாறி மாறி அரசாட்சியையும் அதிகாரத்தையும் கைப்பற்றியவர்களில், சட்டத்தையும், தங்க


வ.உ.சி.

ளைத் தேர்ந்தெடுத்த மக்களையும் மீறி செயல்பட்டவர்களில் கணிசமானவர்கள் நாட்டின் தலைவர்கள், மந்திரிகள், நாடாளுமன்ற அங்கத்தினர்களே.

தற்சமயம் இருக்கும் 225 நாடாளுமன்ற அங்கத்தினர்களும் வெளியேறி, சட்டங்களை மதிப்பவர்கள் – நாட்டைச் சூறையாட விரும்


வாஞ்சிநாதன்

பாதவர்கள் – பதவிக்கு வர வேண்டும் என்ற காலிமுகத்திடல் போராட்டத்தினால், முதன்மை மரங்கள் விழத் தொடங்கிய உடனேயே, பேராண்மை ஆதிக்கத்திற்கு ஆபத்து உண்டாகிறது எனக் கணித்த வர்க்கங்கள், உடனடியாக ஒன்று சேர்ந்து, தங்கள் அதிகாரத்தை மீளத் தக்க வைத்து, போராட்டத்தை நடத்தியவர்களையே தற்பொழுது வேட்டையாடி, அவர்களை பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் தடுத்து வைத்திருக்கிறார்கள். அவர்களுடன் தான் திரும்பவும் தமிழ் மக்கள் பேசப் போகிறார்கள். ஆனால் இதை விட்டால் வேறு வழி என்ன, தங்களின் கைகளில் இருப்பவை என்ன என்பதை சிந்திக்கப் புலம்பெயர் தமிழர் தரப்புகள் என்ன நம்பிக்கையைத் தந்தார்கள்?

வன்னியை வென்று, முள்ளிவாய்க்காலில் விடுதலைப் போராட்டத்தை மௌனிக்கச் செய்து, யாழ்ப்பாணத்தையும் அடக்கு முறைக்கு உள்ளாக்கிய சந்தோசமும் வெற்றி எக்காளங்களும் காற்று போன பலூன் போன்று சொற்ப காலத்தில் மடிந்து, வெற்றியின் உண்மை நிலை மஹிந்த குடும்பத்தின் சூறையாடல்களுக்கு எனத் தெளிவு வெளிப்பட, வாழ்வாதாரங்கள் சுருங்க, சிங்கள மக்களின் சில அறிவாளிகள் அது ஒரு வீண் விரயமானதும், அமைதியான தீர்வுக்கு முரணான நிகழ்வென்றும் உணரத் தொடங்கினர். அவர்களின் பலர் காலிமுகத்திடலில், யுத்தத்தின் அடக்குமுறை பற்றியும், அதனது தன்மையையும் வெளிப்படுத்தி, முள்ளிவாய்க்கால் கஞ்சி தருவதற்கான ஏற்பாடுகளையும் செய்தார்கள். அந்த அறிவாளிகளுடன், அவர்களது வெளிநாட்டு தொடர்பாளர்களோடும் தமிழ் புலம்பெயராளர் இணைந்து பயணிக்கிறார்களா?

ஆனால், நாட்டுக்கு வரும் புலம்பெயராளர், ஏதோ சில கோரிக்கைகளோடு அரசின் சில பகுதிகளை சந்தித்து, செல்வாக்கு நோக்கி பயணிப்பதுதான் தெரிகிறது.

சிங்கள இனவெறிக் கொடுமைக்கு இரையாவதுதான் இனியும் தமிழ் மக்களின் வாழ்வென்றால், தமிழ் மக்கள் மேலும் குமுறி வெடிப்பார்களா? இவ்வளவு பிளவுகளுக்கும் இடையிலும் புலம்பெயர் விடுதலைப் புலிகள் மீண்டும் ஆயுதங்களை கையில் ஏந்தும் உந்துதல்களுக்கான வழிமுறை ஏற்படுத்தக் கூடிய சாத்தியங்கள் வளருமா? அவற்றை மேலும் பார்க்கலாம்.

(வளரும்.....)

காலைக்கதிர்
Kalaikkathir

# புலிகள் அமைப்புடன் தொடர்புடையவர்களின் வழக்குகளில் விசேட கவனத்தை செலுத்துக!

## பிரதம நீதியரசரிடம் நீதி அமைச்சர் கோரிக்கை

சிறையில் உள்ள விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்புடையவர்களின் வழக்குகளில் விசேட கவனம் செலுத்துமாறு பிரதம நீதியரசரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்புடைய குற்றச்சாட்டின் அடிப்படையில் 2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நாடாளாவிய ரீதியில் உள்ள சிறைச்சாலைகளில் 400 பேர் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

அப்போதுதான் நீதியமைச்சராக பதவி வகித்த போது சிறைச்சாலைகளில் இருந்த விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்புடையவர்களின் எண்ணிக்கை 110 ஆகக் குறைக்கப்பட்டது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நல்லாட்சி அரசாங்கத்தில் விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்புடையவர்களின் வழக்குகளை துரிதப்படுத்த விசேட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அதற்கமைய கொழும்பு மற்றும் அநுராதபுரத்தில் விசேட மேல் நீதிமன்றங்கள் ஸ்தாபிக்கப்பட்டு வழக்கு எண்ணிக்கை 60 ஆகக் குறைக்கப்பட்டது.

நாடளாவிய ரீதியில் உள்ள சிறைச்சாலைகளில் விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்புடைய குற்றச்சாட்டின் அடிப்படையில் 31 பேர் உள்ளனர்.

இவர்களில் 16 பேர் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்ட நிலையிலும் 15 பேர் சந்தேகத்தின் அடிப்படையிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

சிறையில் உள்ள விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்புடையவர்களின் வழக்குகளில் விசேட கவனம் செலுத்துமாறு பிரதம நீதியரசரிடம் கோரிக்கை விடுத்துள்ளார் என அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சட்டம் மற்றும் மனிதாபிமான அடிப்படையில் தீர்வு காண்பது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிறைச்சாலைகளில் உள்ள கைதிகள் ஒவ்வொருவரின் தனிப்பட்ட விடயங்களைப் பெற்றுக் கொண்டு, சுகாதாரத்துறை பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில் ஒரு விசேட குழுவை அமைத்து சிறைகைதிகளின் வயது மற்றும் உடல்நிலை ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு ஜனாதிபதியின் அனுமதியுடன் அவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.



# இலங்கை பல்கலைக்கழகத்துக்கு தெரிவான 9 ஆம் தர மாணவன்!



2021க.பொ.த உயர்தர பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் மாணவர்களுக்கான பல்கலைக்கழக வெட்டுப் புள்ளிகள் அண்மையில் வெளியாகின. இதன்படி 14 வயது மாணவர் ஒருவர் பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுள்ளார்.

14 வயதுடைய தேவும் சனஹாஸ் ரண்சிங்க என்ற மாணவனே இவ்வாறு பல்கலைக்கழக அனுமதியை பெற்றுள்ளார். குறித்த மாணவன் வணிகவியல் பிரிவில் பல்கலைக்கழக அனுமதியை பெற்றுள்ளார்.

இலங்கையில் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவான 9 ஆம் தர மாணவனான இவர், 8ஆம் தரம் கல்விகற்கும்போது க.பொ.த சாதாரண தரப் பரீட்சையை எழுதி, 6 மாதங்களுக்கு பின், 9 தரத்தில் க பொ.த உயர்தர வணிகவியல் பிரிவில் பரீட்சைக்குத் தோற்றியுள்ளார்.

இதற்கமைய உயர்தர பிரிவில் இவர் மூன்று 'பி' சித்திகளைப் பெற்றுள்ளார். இதன்படி அவர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் நுழைவதற்குத் தகுதி பெற்றுள்ளார்.

முதலாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை தேவம் குருகுல வித்தியாலயத்தில் படித்த அவர், அதன் பின்னர் நாலனமல வித்தியாலயத்தில் கல்வி பயின்று வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இந்த மாணவன் குடும்பத்தில் மூன்று பிள்ளைகளில் மூத்தவர் எனவும் அவரின் பெற்றோர் ஆசிரியர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# குறிப்பிடத்தக்க எண்ணிக்கையானவர்கள் நாட்டில் நெருக்கடி நிலையில் உள்ளனர்!

## ஐக்கிய நாடுகள் சபை அறிவிப்பு

உணவுப்பாதுகாப்பின்மை, அத்தியாவசியமான மருந்துகளுக்குப் பற்றாக்குறை போன்ற பல காரணிகளால் இலங்கை நெருக்கடியை எதிர்கொள்கின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனிதாபிமான விவகாரங்களை ஒருங்கிணைப்பதற்கான ஐ.நாவின் அலுவலகத்தின் ஆசிய பசுபிக்கிற்கான பிராந்திய அலுவலகம் வெளியிட்ட தகவலிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய ஒக்ரோபரில் உணவு பணவீக்கம் 85.6 வீதமாக காணப்படுவதால், சனத்தொகையில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையானவர்கள் தங்கள் தேவைகளைப் பூர்த்திசெய்வதில் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

மேலும் உணவுப் பாதுகாப்பு தொடர்ந்தும் பிரச்சினைக்குரியதாகக் காணப்படுவதால் பத்தில் மூன்று குடும்பங்கள் போதுமான உணவை உண்ணவில்லை எனவும் ஐ.நா. அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

# மாகாணங்களுக்கு அதிகாரப் பகிர்வை மேற்கொள்ளுமாறு இனவாதிகள் வலியுறுத்தும்சூழல் உருவாக்கப்படவேண்டும்!

## டக்ளஸ் வேண்டுகோள்



அதிகாரப் பகிர்வை மேற்கொள்ளுமாறு இனவாதிகளும் சொல்வதற்குரிய சூழலை ஏற்படுத்த வேண்டுமே தவிர, இனவாத சக்திகளுக்கு மெல்வதற்கு அதனை கொடுக்க கூடாது என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வலியுத்தியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற கடற்றொழில் அமைச்சு தொடர்பான வரவு – செலவுத் திட்ட குழு நிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்தும் உரையாற்றிய அவர் –

ஜனாதிபதி, தமிழ் மக்களின் பிரதிநிதிகளுக்கு விடுத்திருக்கின்ற அழைப்பை ஏற்று அதனை எமது மக்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதற்கு தமிழ் அரசியல் தரப்பினர் முன்வர வேண்டும்.

எம்மைப் பொறுத்தவரையில், தற்போது இந்த நாட்டின் அரசியல் யாப்பில் நடைமுறையில் இருக்கின்ற எமது அரசியல் யாப்பின் 13 ஆவது திருத்தத்தைப் பலப்படுத்தி அதனை முன்னெடுப்பதையே எமது மக்களின் அரசியல் ரீதியான பிரச்சினைக்கு ஓர் ஆரம்பத் தீர்வாகக் கருதுகிறோம்.

இல்லாததைப் பற்றிக் கதைத்து இருப்பதையும் கைவிட்டு விடக்கூடாது என்பதை நாம் வலியுறுத்துகிறோம்.

தமிழ் மக்களது பிரச்சினை தொடர்பில், கிணறு வெட்ட பூதம் கிளம்பிய கதையாக இப்போதே சில நாடகங்கள் அரசியல் அரங்கில் மேடையேற்றப்பட்டு வருவதையும் அவதானிக்க முடிகின்றது. – எனக் குறிப்பிட்டுள்ளார்.

# வெளிநாடுகளில் இருந்து நாட்டுக்கு அனுப்பப்படும் அந்நியச் செலாவணிக்கு வரி அறவிடப்படமாட்டாது!

## மத்திய வங்கி விளக்கம்

வெளிநாடுகளில் பணியாற்றும் இலங்கையர்கள் அனுப்பும் அந்நியச் செலாவணிக்கு வரி அறவிடப்பட மாட்டாது என்று இலங்கை மத்திய வங்கி விளக்கம் அளித்துள்ளது.

இலங்கையர்கள் அனுப்பும் அந்நியச் செலாவணிக்கு வரி அறவிடப்படபோவதாக, பரவி வரும் தகவல்கள் உண்மைக்குப் புறம்பானவை என மத்திய வங்கி கூறியுள்ளது.

இதேபோன்று இந்த பணத்தை பலவந்தமாக இலங்கை நாணயத்துக்கு மாற்றப்பட மாட்டாது என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், வெளிநாடுகளில் உள்ள இலங்கை ஊழியர்களுக்கு தற்போது வழங்கப்படும் பல்வேறு சலுகைகளை எவ்வித மாற்றமும் இன்றி அதே முறையில் தொடர்ந்து அனுபவிக்க முடியும் என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

# சமையல் எரிவாயு விலையை அதிகரித்தாலும் உணவுப் பொருள்கள் விலை அதிகரிக்கப்படாது

## அகில இலங்கை உணவக உரிமையாளர்கள் சங்கம் தெரிவிப்பு

எரிவாயு விலை அதிகரிக்கப்பட்ட போதிலும் உணவுப் பொருள்களின் விலையில் மாற்றம் ஏற்படாது என அகில இலங்கை உணவக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கோதுமை மா உள்ளிட்ட பொருள்களின் விலை குறைக்கப்பட்டுள்ளதால் உணவகங்களுக்கு ஓரளவு நிம்மதி கிடைத்துள்ளதாகவும் அது குறிப்பிட்டுள்ளது.

எரிவாயு, கோதுமை மா உள்ளிட்ட பொருள்களின் விலை குறைவால் உணவுப் பொருள்களின் விலையை குறைக்குமாறு உணவக உரிமையாளர்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இருப்பினும் 60 வீதமான உணவகங்கள் விலையை குறைக்கவில்லை என அகில இலங்கை உணவக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த இக்கட்டான நேரத்தில் நியாயமான விலையில் உணவக உரிமையாளர்கள் வழங்க வேண்டும் என்றும் அச்சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

# மக்கள் நலத்திட்டத்தில் ஆளுநர்கள் பின்னடிப்பு!

## முன்னாள் ஜனாதிபதி மைத்திரி குற்றச்சாட்டு

விலங்குகளால் பயிர்களுக்கு ஏற்படும் சேதத்தை சமாளிக்க 2012 ஆம் ஆண்டு ஆளுநர்களுக்கு அனுப்பப்பட்ட பணம் ஆண்டு இறுதியில் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது. இந்த விடயத்தில் தலையிட ஆளுநர்கள் விரும்பவில்லை என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

வரவு – செலவுத் திட்டத்தில் விவசாய அமைச்சின் செலவீனங்கள் மீதான குழு விவாதத்தின் போதே முன்னாள் ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

மேலும் நாட்டில் நான்கில் ஒரு பங்கு உணவுகள் விலங்குகளால் அழிக்கப்படுகின்றன எனவும் மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டுள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.12.2022இல் வெளியிடப்பெற்றது.